ஸ்ரீ:

# சாளக்ராம மஹிமைகள்



**Sri Mukthi Narayaperumal, Salagramam**



Salagramamurthi

# சாளக்ராம மஹிமைகள் - 01 (01.11.2012)

இனி வரும் நாட்களில் நாம் சாளக்கிராம மஹிமைகளைக் காண்போம்...! ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் தமது ஸ்ரீபாகவத தர்ம சாஸ்திரத்தில் மிக விஸ்தாரமாக பல அரிய தகவல்களை அளித்துள்ளார்..! அவற்றிலிருந்தும் சில காண்போம்..!

பொதுவாக சாளக்கிராமத்தினை பெண்கள் தொட்டு பூஜை செய்யலாகாது..! கீழ் காணும் கருத்துக்கள் ப்ரஹன் நாரதீயம் என்னும் ஸம்ஹிதையில் உள்ள கருத்துக்களாகும்...!

எங்கு சாளக்கிராம மூர்த்தி இருக்கின்றதோ...
அங்கு பூதம், வேதாளம் நடமாடாது. சாளக்கிராமம் உள்ள வீடே தபோவனம். அதுவே புண்யதீர்த்தம். அங்குதான் பகவான் நித்யவாஸம் செய்கிறார். எந்த வீட்டில் சாளக்கிராம பூஜை இல்லையோ அந்த வீடு அசுபம்.
-ப்ரஹன் நாரதீயம்

## சாளக்கிராம மஹிமைகள் - 02 (03.11.2012)

சாளக்கிராமம் என்பது ஒரு தெய்வீகமான பூச்சியினது ஓடுதான்..! இந்த பூச்சி புனிதமான கண்டகி நதியில்தான் காணப்படுகின்றது. இது மிகவும் விரும்பி உண்ணும் உணவு துளசி இலைகள்தானாம்..! இது போன்று துவாரகை நதியில் ஒரு புனிதமான சக்கரங்கள் நிறைய அடர்த்தியாகக் காணப்படும் ஒரு வெண்ணிறமான புனிதமான கடிமப்பொருள் கிடைக்கிறது. இது “சக்ரசிலா“ அல்லது துவாரகா சாளக்கிராமம் என்று அழைக்...கப்படுகின்றது. இதுவும் சாளக்கிராமத்திற்கு நிகரானது..! மிகவும் புனிதமானது..! பாத்மபுராணம் சாளக்கிராம மஹிமைகளை விஸ்தாரமாக எடுத்துச் சொல்கின்றது..! அவற்றில் சில காண்போம்..! 1) தினமும் சக்ரசிலா அல்லது சாளக்கிராமத்தினைப் பூஜிப்பவருக்கு மீண்டும் ஜனனம் இல்லை..! 2) துவாரகாசிலாவும், சாளக்கிராமும் நூறு ஜன்ம பாபங்களை நீக்கும். 3) சாளக்கிராமத்தினை பூஜை செய்து அதன் தீர்த்தத்தினை பிரஸாதமாகப் பருகுபவன், ஆயிரக்கணக்கான பாபங்களைச் செய்தாலும், அவையனைத்தும் நீங்கப்பெற்று புனிதம் பெறுவான். இது பிரம்மஹத்தி பாபத்தினைக் கூட போக்கவல்லது. 4)சாளக்கிராம பூஜையினைக் கிரமமாக பண்ணுபவனது வீட்டிற்கு சமீபம் நூறு யோஜனை தூரத்திற்கு அனைத்து புண்ய தீர்த்தங்கள் சூக்குமமாக நிலைபெறும். 5)சாளக்கிராம ஸந்நிதியில் ஸ்நானமும், அங்கு செய்யும் தானமும் காசியினைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகப்பலனைத் தரும். சாளக்கிராமம் நிறைந்துள்ள கிரஹம் காசியினைக் காட்டிலும் உயர்ந்தது. 6)சாளக்கிராமத்தினைத் தரிசனம் செய்தாலும், பூஜை செய்தாலும், தீர்த்தம் எடுத்துக் கொண்டாலும், கோடி யாகம் செய்த ப்ண்ணியமாம்..! கோடி கோதானம் செய்த புண்ணியமாம்..! அவனுக்குக் கர்ப்பவாஸம் மீண்டும் கிடையாது என்பது திண்ணம்..!

## சாளக்ராம மஹிமைகள்- 03 (03.11.2012)

some of the collections from the websites reg Salagrama..! Chakra Shaligram represent milky way galaxy which is Vishnu of our universe. See the information from different Purana. With Keshava in the form of Shaligram sila reside all the devatas, asuaras, yaksas and the fourteen worlds.--- Padma Purana

The Lord resides in many places in which he may be worshipped, but of all the places Shaligram is the best.---Garuda Purana

Any person who has seen Shaligram shila, paid obeisances to Him, bathed and worshipped Him, has achieved the results of performing ten million sacrifices and giving ten million cows in charity.--- Skanda Purana –

Hari-bhakti-vilas "Merely by touching a shaligram one becomes freed from the sins of millions of births, so what to speak of worshiping Him! By Shaligram puja one gains the association of Lord Hari."--- Gautamiya Tantra

"Shalagramas do not require installation ceremony. When one begins the worship of shaligram, however he should start with elaborate puja using all articles. The worship of shaligram is the best form of worship, better than the worship of the sun."--- Skanda Purana "All those holy rivers awarding moksha, such as the Ganga, Godavari and others, reside in the charanamrita (bath water) of shaligram."--- Padma Purana "Shalagrama should not be placed on the earth or ground and worshiped."---Sammohana Tantra "By taking the remnants of foodstuffs offered to shaligram, one will get the result of performing many sacrifices."--- Skanda Purana

## சாளக்ராம மஹிமைகள்- 04 (04.11.2012)

சில சாளக்கிராமத்தில் தங்கரேகைகளோ அல்லது வெள்ளி ரேகைகளோ காணப்படும். இவைகள் மிக மிக உயர்ந்தவை. இதனால் நேபாளத்தில் நிறைய சாளக்கிராமங்களை அங்குள்ள சில வணிகர்கள் உடைத்துப் பார்த்தே விற்கின்றார்கள். இது வருந்தத்தக்க விஷயம்..! சுயமாக தங்கம் மற்றும் வெள்ளியினை உற்பத்தி செய்யும் இத்தகைய தெய்வீகத் தன்மையை என்னவென்று போற்றுவது...!

சரி..! பாத்ம புராணத்திலிருந்து மேலும் சில பெருமைகளைக் காண்போம்...!

1) சாளக்கிராம் பூஜை செய்பவனின் சித்தம் சுத்தமாகும். காமம் என்ற அழுக்கு நீங்கும்.

2) சாளக்கிராம பூஜை செய்பவன் விஷ்ணுவாகவே ஆகி விடுகின்றான்.

3) சாளக்கிராம சிலாவின் பிம்ப தரிசனம் கொலை செய்தவனின் பாபத்தினையும் போக்கும்.

4)சாளக்கிராமத்தினை நினைத்தாலும், தரிசனம் செய்தாலும், பூஜை செய்தாலும், சிம்ஹத்தினைக் கண்ட மற்ற மிருகங்கள் தெறித்து ஓடுவது போல், பாபங்கள் கழன்று ஓடும்.

5) இதனை பக்தியுடனோ அல்லது பக்தியே இல்லாது அல்லது திடீரென எதிர்பாராது பூஜை செய்ய நேர்ந்தாலும் முக்தி உண்டு.

6)சாளக்கிராம பூஜை செய்பவனுக்கு யமபயமில்லை.

7)சந்தனம், புஷ்பம், தீபம், தூபம், நைவேத்யம், இப்பூஜையினை செய்பவர்கள் விஷ்ணுலோகத்தில் அனந்தகாலம் வாழ்வான்.

## சாளக்கிராம மஹிமைகள் - 05 (05.11.2012)

ஸ்ரீரங்கம் பெரியபெருமாளை ஸேவித்திருக்கின்றீர்களா..? பெரியபெருமாள் திருமேனி முழுக்கவே ஆயிரக்கணக்கான சாளக்கிராமங்களினால் ஆனதுதான் என்பார்கள் எங்கள் பெரியோர்கள்..! அப்படியானால் எத்தகைய மகத்துவம் பொருந்தியதாகயிருக்க வேணும்..! இந்த ஆயிரக்கணக்கான சாளக்கிராம மூர்த்தியினைதானே பிரும்மா ஆராதித்து வணங்கிவந்தார்..? நினைத்துப் பாருங்கள் எத்தகைய பழமையும் பெருமையும் புகழும் படைத்ததாகயிருக்கின்றார் பெரியபெருமாள்..! மூலஸ்தானத்தினை ஒட்டி ஒரு பிராகாரம் உள்ளது. இதனை “திருவெண்ணாழி பிராகாரம்“ (இந்த பெயருக்கானக் காரணம் பற்றி ஆராயவேண்டும்..!) என்பர். இந்த பிராகாரம் முழுதும் பல்லாயிரக்கணக்கான சாளக்கிராமங்களினால் சூழப்பட்டதுதான் என்பர். உடையவர் இந்த பிராகாரத்தில் கால் பதித்து பிரதட்சிணம் செய்யமாட்டாராம்..! முழங்கால்களினாயே வலம் வந்து வணங்கினார் என்ற ஒரு குறிப்பு உண்டு...! நாம் ஒருமுறை சென்று வணங்கினாலும் கோடி புண்ணியம்..! ரஙகனின் கீர்த்தி அத்தகையது...!

சரி..! இன்று சில பெருமைகளை மேலும் காண்போம்..!

8) சாளக்கிராமத்தினைப் பக்தியுடன் நமஸ்கரித்தவன் தேவனே ஆகின்றான்..! அவன் சாமான்ய மனிதன் அல்ல..!

9)சாளக்கிராமம் - பகவான் இருக்குமிடம்..! சர்வ பாபங்களையும் நாசம் செய்யவல்லது.

10)இராஜசூய யாகம் ஆயிரம் செய்தாலும், சாளக்கிராமத்தினை ஒரு நாள் பூஜை செய்த பலனுக்கு ஈடாகாது..!

11) பாபங்கள் செய்தவர்கள் கூட சாளக்கிராம பூஜையினால் பரகதி அடைகின்றார்கள். பக்தியோடு செய்பவர்கள் முக்தியடைவார்கள்.

12)அரணி கட்டையில் அக்னி உண்டாவது போல், சாளக்கிராமத்தில் ஹரி இருக்கின்றார். 19)ஸ்ரீலக்ஷ்மி மற்றும் ஸ்ரீவைகுண்டத்தில் பிரஸன்னமாகயிருப்பதைக் காட்டிலும், ஹரி சாளக்கிராமத்தில் மிகவே பிரஸன்னமாக உள்ளார்.

13) சாளக்கிராம பூஜை செய்தால், அக்னிஹோத்ரமும் பூதானமும் செய்த பலன்...! கீழ்காணும் தகவல்களை திரு. ரமணப்பட்டர் அவர்கள் தெரிவித்துள்ளார்..! அவருக்கு என் மனமார்ந்த நன்றிகள்..!

Ramana Bhattar Melum salagramam 12 serthu thiruvaratham seiythaal oru divya desa thiruvartahanam seiytha palan kidaikum, melum andha moothyin thejas namai sutri 1.20mail suththyai undu panumaam. Salagrama aarathanam seiyum edangalil yema kingarargaluku edamillai... Melum salagramam nithya suthy udayathu. Oru velai thiruvarathanam seiya eyalatha sandharbam undahinaal Maru naal seerathinaal(pasum paal) kondu thirumanjanam seivika Andha dosam neengum. Salagrama silaa vaibavam enkira pusthakathil adiyen padithathu.... Dasannnnnn...See More

## சாளக்கிராம மஹிமைகள் - 06 (07.11.2012)

கடந்த 05.11.2012 அன்று “திருவெண்ணாழி“ என்ற பிரகாரத்தினைப் பற்றியும் அதன் பெயர் காரணம் பற்றி ஆராய வேண்டும் என்றும் பதிந்திருந்தேன். சில பெயர் காரணங்கள் பற்றி நாம் பெரும்பாலும் கவலைப்படுவதில்லை. நம் கவனத்திலும் வருவதில்லை. இந்தத் தொடர் எழுதும் போதுதான் இதற்கான

பெயர் காரணம் பற்றித் தெரியவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. இம்மாதிரி ஆவல்களை எல்லாம் எப்படியாவது அரங்கன் தீர்த்து வைத்து விடுவான். அன்று இரவே என் நண்பர் திரு.இராஜாதேசிகனுடன் பேசிக்கொண்டிருந்த போது இதன் பெயர் காரணத்தினை அநயாசமாக விளக்கினார் அயர்ந்து போனேன்- அரங்கனின் கருணைக் கண்டு..!

திரு என்றால் திருமால்

வெண் என்றால் வெண்மை

ஆழி என்றால் கடல்

**அதாவது திருமால் பள்ளி கொண்டுள்ள திருப்பாற்கடல். "க்ஷீராப்தி".** அப்படியானால் இந்த பிராகாரத்திற்னை திருபாற்கடலாகவும் உள்ளே பள்ளி கொண்டுள்ள அரங்கன் "க்ஷீராப்தி நாதன்" ஆகவும் அறியப்படுகின்றார். இந்த "க்ஷீராப்தி நாதன்" ஸேவையினை வைகுண்ட ஏகாதசி இராப்பத்து 10 நாட்களிலும் நாம் கண்டு களிக்கலாம். அரங்கன் திருமேனி முழுவதும் நல்முத்துக்களான போர்வையினைச் சாற்றிக் கொண்டு "க்ஷீராப்தி நாத"னாய் நமக்கு அருள் பாலிப்பார். இந்த பிராகாரத்திற்குத்தான் என்னவொரு அருமையான பெயர் காரணம்..!

ஸ்ரீரங்க மஹாத்மியம் விமானத்துடன் பெரியபெருமாள் வந்திறங்கினார் என்று கூறுகின்றது. பெருமாள் ஸ்வயமாகத் தோன்றியவர். அப்படியானால் இன்று நாம் ஸேவிக்கும் அரங்கனும், அரங்கனது திருமேனிக்குள் இருக்கும் சாளக்கிராமங்களும் ஸ்வயமாகத்தானே தோன்றியிருக்கக்கூடும்...! எனக்கு வெகுநாட்களாக ஒரு சந்தேமுண்டு..! இந்த அரங்கனின் அகண்ட திருமேனிக்குள் ஆழ்வார்கள் கண்டு ரசித்து மயங்கிப்பாடிய "பச்சைமா மலை போல் மேனி" ரங்கன் உறங்குவான் போன்று மாயம் செய்கின்றானோ என்று...! அரங்கனுத்தான் தெரியும் இந்த தேவ ரகசியம்...!

சரி..! இன்று மேலும் சில சாளக்கிராமத்தின் மஹிமைகளை பாத்ம புராணம் கூறக் காண்போம்..!

14) பன்னிரெண்டு சாளக்கிராமங்கள் கொண்டு பூஜை செய்தால் உண்டாகும் பலனை அறிவாயாக..! - பன்னிரெண்டு கோடி சிவலிங்ககளை பன்னிரண்டு கல்பகாலம் பூஜை செய்த பலன் ஒரே நாளில் கிடைக்கும்..!

15) காமக்குரோதங்கள் உள்ள மனிதன் கூட சாளக்கிராம பூஜையினால் முக்தி பெறுவான்.

16)தீர்த்த யாத்ரையோ, யாகமோ செய்யாமலேயே, சாளக்கிராம பூஜையால் மட்டும் முக்தி பெறுவான்..!

17)சாளக்கிராம தீர்த்தத்தாலேயே சர்வ புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த பலனும், சர்வ யக்ஞம் செய்த பலனும் கிடைத்துவிடும். பல புண்ணிய தீர்த்த தேவதைகள் சாளக்கிராமத்தினுள் சூக்குமமாகயிருந்து அருள்பாலிக்கின்றனர்.

18) விஷ்ணு சகஸ்ர நாம பாராயணம் செய்து கொண்டே சாளக்கிராமப் பூஜை செய்பவன் விஷ்ணுபதம் அடைகின்றான்.

19) சாளக்கிராமம் உள்ள இடத்தில் சமஸ்த லோகங்களும், சமஸ்த தேவதைகளும் இருக்கின்றனர்.

20) பஞ்சகவ்யம் ஏன் சாப்பிட வேண்டும்..! சாளக்கிராம தீர்த்தமே போதும் நம் உளளும் புறமும் சுத்தமாகும்..!

21) ஒரு திவலை சாளக்கிராம தீரத்தம் சாப்பிட்டால் போதும் மீண்டும் தாய்ப்பால் சாப்பிடும்படி நேராது.

## சாளக்கிராம மஹிமைகள் - 07 (09.11.2012)

இந்த ஐப்பசி மாதம் “துலா மாதம்” என்றழைக்கப்படும். காவிரி ஸ்நானம் இந்த மாதத்தில் பலமடங்கு நற்பலனைத் தரவல்லது. இந்த ஒரு மாதம் மட்டும் அரங்கனுக்கு தங்கக்குடத்தில் காவிரியிலிருந்து புனித நீர் கொணரப்பட்டு பூஜைகள் நடைபெறும். இந்த மாதத்தில் இன்னொரு மிகப் பெரிய விசேஷம் பெரியபெருமாள், உற்சவர் மற்றும் ஸ்ரீரங்கநாயகித் தாயார் ஆகிய மூவரும் இந்த ஒரு மாதம் மட்டும் சாளக்கிராமத்தினால் ஆன

மாலை அணிந்திருப்பர். இந்த தரிசனம் இந்த ஒரு மாதம் மட்டும்தான் - இதுவும் நற்பலன்கள் பல தரவல்லது. ஆக இந்த மாதத்தில் காவிரியில ஸ்நானம் செய்து அரங்கனை தரிசிப்பவர்கள் ஸ்நானபலமும் ஸேவாபலமும் பலமாகக் கிடைக்கப்பெறுவர்

பாத்மபுராணத்திலிருந்து மேலும் சில பலன்களைக் காண்போம்...!

22) சாளக்கிராம ஸந்நிதியில் ஒரு புழு இறந்தாலும் கூட பரமபதம் சென்று விடும்

23)சாளக்கிராம ஸந்நிதியில் பிண்டம் போட்டால், பித்ருக்களுக்கு மிகப்பெரிய ப்ரீதி உண்டாகின்றது.

24) சாளக்கிராம ஸந்நிதியில் செய்யும் ஸ்நானமும், தானமும் காசியில் செய்வதைவி நூறு மடங்கு அதிக பலன்.

25)சுவர்க்கத்திலும், இப்புவியிலும், பாதாளத்திலும் சாளக்கிராமத்திற்கு ஸமம் ஏதும் இல்லை.

இனி வரும் காலங்களில் மேலும் சில புராணங்களிலிருந்து காண்போம்..!

## சாளக்கிராம மஹிமைகள்-08 (11.11.2012)

ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு - இவர் 14 ம் நூற்றாண்டில் அவதரித்த மஹாபுருஷர். ஸ்ரீகிருஷ்ணரின் மறு அவதாரமாகவே போற்றப்படுபவர். இவர் கி.பி. 1510ம் ஆண்டு அரங்கனைத் தரிசிக்க ஸ்ரீரங்கம் வந்தார். அச்சமயம் எங்களது வம்சாவளியினைச் சார்ந்த திரு. வேங்கட பட்டர் என்பவர் அரங்கனுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டிருந்தார். மஹாப்ரபு வந்திருந்த சமயம் சாதுர்மாஸ்ய காலம்..! திரு.வேங்கட பட்டர் அவருக்கு உதவியாகயிருந்த திரு. திருமலைப்பட்டரும் ஸ்ரீசைதன்ய மஹாப்ரபுவினை தங்களது இல்லத்தில் (இந்த இல்லத்தில் நாங்கள் அனைவரும் பிறந்தோம் என்பது எங்களது பூர்வஜன்ம பாக்கியம்..!) தங்கி சாதுர்மாஸ்ய சங்கல்ப்பம் செய்து கொள்ள பிரார்த்திக்க, மஹாபரபுவும் உடனே சம்மதிததார். சாதுர்மாஸ்ய காலத்தில் மஹாப்ரபு ஸ்ரீகிருஷ்ணர், பலராமர்,சுபத்ரை ஆகிய

தெய்வீகத் திருமேனிகளை, மரத்தில், தம் கையினாலேயேக் கடைந்து பிரதிஷ்டை செய்தார். அந்த திருமேனிகளை இன்றும் தரிசனம் செய்யலாம். அடியேனது கிரஹத்திற்கு எதிரில் உள்ளது. ஜகந்நாத மடம் என்று திருநாமம். திரு வேங்கட பட்டருக்கு ஒரு குமாரன். ஸ்ரீ கோபால பட்டர் என்று திருநாமம். 12 வயது பாலகன். ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் கருணையான கடாக்ஷத்திற்கு ஆளானார். மஹாப்ரபு அவரை பிருந்தாவனத்திற்கு வரச்சொல்லி ஆக்ஞையிட்டு, சாதுர்மாஸ்ய சங்கல்பத்தினை முடித்துக் கொண்டு கிளம்பினார். மஹாப்ரபுவினை மறக்கமுடியாத கோபாலபட்டரும் பிரும்ஹாச்சாரியாக தன்னுடன் தன் உறவினரும் தமது இல்லத்திலேயே பிறந்து வளர்ந்த “ப்ரபோதானந்த சரஸ்வதி“ என்பவருடன் பிருந்தாவன் சென்றார். ஸ்ரீகிருஷண சைதன்யரின் மதிப்பு மிகுந்த கோஸ்வாமிகள்ல் அவரும் ஒருவராக ஆகி “கோபாலபட்டர் கோஸ்வாமி“ ஆனார். அவர் அங்குள்ள ஒரு ஸந்நிதியில் பூஜை செய்யும் பாக்யத்தினையும் அடைந்தார். அந்த சந்நிதியில் உற்சவ பிம்பங்கள் ஏதுமில்லை. சில பெரிய சாளக்கிராமங்களே இருந்தது. ஸ்ரீகோபால பட்டர் கோஸ்வாமி ஒரு நாள் பூஜை செய்து இரவு படுக்கச் செல்கையில் இந்த சாளக்கிராம மூர்த்திகளுக்குப் பதிலாக விக்ரஹ லக்ஷணங்களுடன் மூர்த்தியிருந்தால் எப்படியிருக்கும்...? என்ற எண்ணியபடி உறங்கினார்..! மறுநாள் காலை...! என்னவொரு ஆச்சர்யம்..! அங்குள்ள சாளக்கிராமம் ஸ்ரீகிருஷ்ணராகவே, எவராலும் வடிக்கமுடியாத அழகோடும், தேஜஸ்ஸோடும் அற்புதமாக உருமாறி கடாக்ஷம் செய்தது. இன்றும் இந்த திருக்கோவில் அங்கு “ஸ்ரீராதாரமண்“ மந்திர் என்ற பெயரோடு கீர்த்திப்பெற்று விளங்குகிறது.

சாளக்கிராமத்திற்கு நாம் உள்ளன்போடு செய்யும் பூஜை அத்தகையது. நாம் எண்ணமதைத் திண்ணமாக்கும்..! நம் நல் எண்ணங்கள் யாவும் ஈடேறும்..! நினைத்தது நடக்கும்..!

திரு. G. ஓப்பெர்ட் என்பவர் **”Inhabitants of Bharata Varsha"** என்ற புத்தகத்தில் சாளக்கிராமத்தினைப் பற்றிய தமது எண்ணத்தினை

**"As this stone possesses besides considerable magnetic force, one need not be surprised that divine or supernatural powers are ascribed to it, and that it is regarded as manifestation of the deity"**

என்று குறிப்பிட்டுள்ளார்..! அதாவது “இந்த கல் ஆகர்ஷண சக்தி வாய்ந்ததுமல்லாமல் தெய்வீக அல்லது இயற்கைக்கு மேலான சக்தி வாய்ந்ததாகயிருப்பதால், கடவுளின் தோற்றம் இருப்பதாகக் கருதுவதில் ஆச்சர்யமில்லை“ என்கிறார். முற்றிலும் உண்மை..!

இன்று நடந்த ஒரு விந்தையினைக் கூறுகின்றேன்..! நான் எப்போதுமே தலைப்பையோ அல்லது அதற்குண்டானக் கருவையோ தேர்ந்தெடுத்து எழுதுவதில்லை. எனக்கு ஸ்ரீரங்கநாச்சியாரைப் பற்றி எழுத வேண்டும் என்று வெகுநாள் ஆசை..! ஸ்ரீபீஷ்மரைப் பற்றி எழுத வேண்டுமென்று ஆசை..! ஆனால் எண்ணத்தில் என்ன தலைப்பு மின்னுகின்றதோ அதைத்தான் எழுத முடியும்...! அந்த உந்துதல் அரங்கனது ஆணை..! அறிவிப்பாளன்தான் அடியேன்..! அறியப்படுபவது அவன் என்ன ஆணையிட்டானோ அதைத்தான்..! கம்ப்பூயுட்டர் முன்வந்து எண்ணமதை வரிகளாகக் கொட்டிவிடுவேன்..! இன்று சாளக்கிராமத்தினைப் பற்றி மேலும் சில விபரங்கள் கிடைத்தால் நன்றாகயிருக்கும் என்று நினைவுடன் எனது புத்தக அலமாரியினைத் திறந்து அங்குள்ளக் குவியலிலிருந்து ஒரு புத்தகத்தினை உருவினேன். நீங்கள் நம்பமாட்டீர்கள்..! அந்த புத்தகம் பழைமையான “சாளக்கிராம சிலோத்பத்தி“ என்றவொரு கிரந்தம்..!

நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் போதும் அரங்கன் பல மைல்கள் நடக்கும் சக்தித் தருவான். நம் எண்ணமும் செயலும் தீர்க்கமாகவும், ஒருமித்தும் இருந்தால் போதும் - விந்தைகள் பல நிகழும். எண்ணமும் செயலும் நினைத்ததை ஈடேற்றும். எண்ணம் போல் வாழ்வு..!

## சாளக்ராம மஹிமைகள் - 09 (13.11.2012)

சாளக்ராமத்தின் மஹாத்ம்யம் யாவருமே ஒப்புக்கொண்ட விஷயம்..! இது பிரத்யக்ஷமாக விஷ்ணுவின் அம்சம் என்பதனை சாளக்கிராமத்தினுள் உள்ள சக்ரம், சங்கம், தாமரைப்பூ, கதை ஆகிய விஷ்ணுவின் சின்னங்கள் உறுதி செய்கின்றன. இந்த ரேகைகள் மிகவும் சூக்குமமானவை. மனிதர்களால் செதுக்கியோ அல்லது வரையவோ முடியாது. ஆகையால் ஒரு வித பூச்சிதான் வரைந்திருக்க வேண்டும். இதனை புராணங்களும் கூறுகின்றது. ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த

பூச்சிக்குப் புராணங்கள் சூட்டியுள்ள பெயர் "**வஜ்ர கீடம்**". இதனைப் புராணங்கள் "பொன் வண்டு" என்று போற்றுகின்றது. இது வண்டு போல் பறக்கும் தன்மை வாய்ந்ததாகவும் மீனைப் போல் நீரில் நீந்தும் தன்மை வாய்ந்ததாகவும் உள்ள ஒரு தெய்வீக ஜந்து என்று புகழ்கின்றது. எப்படி பகவான் மாயா ரூபியாக இருக்கின்றானோ அதைப்போல இந்த சாளக்கிராம சிலையினை உருவாக்கும் இந்த தெய்வீக வண்டும் மாயாரூபியாக இருப்பது மிகுந்த ஆச்சர்யம்தான்..! இதுவரை இந்த தெய்வீகத்தினை யாரும் நேரில் கண்டதில்லை என்பதும் ஆச்சர்யம்..! முக்திநாத் க்ஷேத்ரமானது பூமியின் கடல் மட்டத்திலிருந்து சுமார் 12500 அடி உயரத்தில் உள்ளது. அதற்கும் மேலுள்ள சாளக்ராம மலையிலிருந்துதான் கண்டகி நதியானது உற்பத்தியாகின்றது. (சுமார் 17000 அடி உயரத்திலுள்ளது) இந்த இடம் மனிதர்கள் பயணிக்க முடியாத ஒரு கடுமையான இடமாக உள்ளது. எப்போதும் கடும் பனியும், பாதை சரிவர இல்லாமலும் உள்ளது. இத்தகைய மனித நடமாட்டம் இல்லாத இடத்தில்தான் சாளக்கிராமம் உருவாகின்றது. இதனால் கூட "வஜ்ர கீடம்" எனும் அந்த புனிதமான வண்டினை நாம் கண்காணிக்க முடியாது போகின்றது. இவ்விடத்திலிருந்து கீழே விழும் இவ்வண்டுகள் இல்லாத சாளக்கிராமத்தினைத்தான் நாம் பொறுக்கி எடுக்கின்றோம்...! இந்த வண்டுகள் தங்கமயமானவையானதால் அவைகள் உண்டாக்கும் ரேகைகளில் இதன் மேலுள்ள தங்கம் சில சாளக்கிராமங்களில் அழுத்தப்பட்டு தங்கரேகைகள் உண்டாவது ஆச்சர்யத்திலும் மிகுந்த ஆச்சர்யமாகும்..! ப்ரம்ஹவைவர்த்தம் என்னும் புராணம் சொல்கின்றது..! எல்லா பூஜையும் மிகச் சிறந்ததுதான்..! ஆயினும் எல்லாவற்றைக் காட்டிலும் மிகுந்த உத்தமமானது சாளக்கிராம பூஜையாகும். சாளக்கிராமத்தில் எல்லா தேவர்களும் உறைந்துள்ளனர். சாளக்ராம தீர்த்தத்தினைப் பருகுபவன் ஜீவன் முக்தனாகின்றான். முடிவில் ஸ்ரீகிருஷ்ணரின் பாதாரவிந்தங்களை அடைவான்..! ஸ்ரீசிலா சக்ரம் எந்த வீட்டில் இருக்கின்றதோ அங்கு பகவானின் சக்ரம் ஒளிர்கின்றது. ஸர்வ தீர்த்தங்களும் அங்குதான் இருக்கின்றது. சாளக்கிராம தீர்த்தம் சாப்பிட்டவன் எந்த தேசத்தில் மரணம் அடைந்தாலும் முத்துப்பல்லக்கில் ஏறி வைகுண்டம் சேருவான். மூர்த்தி பூஜையினைக் காட்டிலும் சாளக்கிராம பூஜையே சிறந்தது. பரிபூர்ணமான பலன் சாளக்ராமத்தினை ஆராதிப்பதனால் கிடைக்கும்...!

## சாளக்ராம மஹிமைகள் - 10 (16.11.2012)

சாளக்ராமத்தின் கனிமப்பொருட்கள் ஒரு வித குளிர்ச்சியினைத் தருபவை. மேலும் இவைகள் எந்தவித அசுத்தமுமில்லாத, மனிதர்கள் எவரும் அண்டாத, தூய்மையான, புனிதமான நீரினை நிறைய கிரஹித்து உருவாகுவதால், இந்த தரமான புனித சாளக்கிராமங்கள் இருக்கும் கிரஹங்கள் குளிர்ந்து இருக்கும். பூஜாக்கிரமங்கள் இவற்றிக்கு சரிவர செய்தோமானால் நம் மனதும், அந்த கிரஹத்தில் உள்ளோர் மனதும், அந்த கிரஹத்தினைச் சுற்றி வசிப்போர் மனதும் நல்வழிப்படும். கடுமையான வார்த்தைகள், வாக்குவாதங்கள் ஏதும் வராது. அக்குடும்பமே ஒரு கோவிலாக மாறும்..!

ஸ்ரீ மாத்வாச்சாரியார் வடக்கே வேதவியாஸ ஆஸ்ரமத்தில் சுமார் எட்டு வருட காலம் தங்கியிருந்தார். அப்போது சில அருமையான சாளக்கிராம சிலா மூர்த்திகளைப் பூஜித்துள்ளார். பின்னாளில் ஊர் ஊராக பயணிக்கவேண்டி வந்த சந்தர்ப்பத்தில் இவற்றினை நாம் சரிவர பூஜிக்க இயலாது போய்விடுமோ என்று எண்ணி, ஆறு மூர்த்திகளை சுப்ரமண்ய ஸ்வாமி கோவிலிலும் (எந்த ஊர் என்று யாருக்காவது தெரியுமா..?) ஒன்றை மத்ய கயாவிலும், இன்னொன்றினை உடுப்பி கிருஷ்ணர் கோவிலிலும் சமர்ப்பித்துள்ளார். எனவே நம்மால் சரிவர பூஜைகள் தினசரி செய்யமுடியாவிடின் தகுந்த நபர்களையோ, அல்லது பூஜைக்ரமங்கள் சரிவர நடக்கும் கோவில்களிலோ சமர்ப்பித்தல் நலம்.

நன்று..! இனி புராணங்கள் என்ன சொல்கின்றது என்பதினை மேலும் பார்ப்போம்...!

சாளக்கிராமத்திலும், மணியிலும், மந்திரத்திலும், ப்ரதிமையிலும் நித்யபூஜை செய்யலாம். சாளக்கிராமமில்லாத கோவிலில் பூஜை செய்து பயனில்லை..!

சாளக்கிராமத்தினை குளம்படி சின்னம் உள்ளதாயும், நல்ல கருப்பானதாகவும், குளிர்ச்சி உடையதாகவும் பார்த்து பொறுக்கவேண்டும். அதுவே மோக்ஷப்ரதம்..!

பன்னிரெண்டு சாளக்கிராம பூஜை விசேஷமானது..! துவாரகா சிலையும் கூட வைத்து பூஜித்தல் இன்னமும் விசேஷம்..! சாளக்கிராமத்தின் துவாரத்தில் எல்லா பித்ருக்களும் இருக்கின்றனர். சாளக்கிராமமுள்ள இடமே விசேஷம்..! (சாளக்கிராம அபிஷேக தீர்த்தத்தினைத் தினமும் சிரத்தையோடு பருகுபவன் பித்ருக்கள் சாபத்திலிருந்தும் தோஷத்திலிருந்தும் விடுபடுவான்..!)

மரணகாலத்தில் சாளக்கிராம தீர்த்தத்தினால் ப்ரோக்ஷிக்கப்படும் ஜீவன் வைகுண்டம் போகின்றது..!

துவாரகாசிலை வெகு சக்ரம் உள்ளதாகும்..! அதுவே சித்ரூபமானது..! ப்ராக்ருதமானது...!

- பிருந்தாவன மஹாத்மியத்திலிருந்து..!-

## சாளக்கிராம மஹிமைகள் - 11 (21.11.2012)

சாளக்கிராமம் தோன்றியதற்கான புராணங்கள் அநேகமிருக்கின்றன. அவற்றில் அடியேனுக்குப் பிடித்து, அரங்கனாலும் அனுமதிக்கப்பட்ட ஒன்றினைக் காண்போம்..! ("அரங்கனால் அனுமதிக்கப்பட்டதா"..? ஆம்...! எப்போதுமே முரண்பாடான சில விஷயங்கள் கிடைக்கும்போது நம்பெருமாளின் திருவடிகளில் திருவுளச் சீட்டு போடுவேன். எதை அனுமதிக்கின்றாரோ அதனைப் பிரசுரம் செய்வேன்..!).

கதைக்கு வருவோம்...!...

பிரும்மாவிற்கு ஒரு நியாயமான கவலை வந்தது. "பூமியில் நிறைய பாபிகள் உருவாகிக்கொண்டேயிருக்கின்றார்களே, அவர்கள் எல்லாம் எப்படி உருப்பட்டு கரையேறுவார்கள்" என்று..! ஆனானப்பட்ட பிரும்மாவிற்கே இந்த பயம் கலந்த கவலையினால் கன்னத்திலும் கண்டத்திலும் அதிகமாக வியர்வை உண்டானதாம். அவர் கண்டத்திலிருந்து உண்டான வியர்வைத்துளிகள் பூமியில் விழுந்ததும் ஒரு பெண் உதயமானாள். கண்டத்திலிருந்து வந்த வியர்வைத்துளியில் ஜனித்தவள் அல்லவா..!

அதனால் அவள் "கண்டகி" எனும் திருநாமம் பெற்றாள்..! அவள் கடும் தவம் புரிந்தாள்..! வரம் தர பிரும்மா பிரஸன்னமானார். கண்டகி வேண்டினாள் "எல்லா தேவர்களும் என் கர்ப்பத்தினை அடைந்து எனக்கு புத்திரர்களாக வேண்டும்". பிரும்மா உறுதியாக முடியாது என்றார். கண்டகி கோபமானாள்..! விளைவு..! சாபம் கொடுத்தாள், " எல்லா தேவர்களும் புழுவாகக் கடவாக" என்று...! தேவர்கள் அனைவருக்கும் வந்தது கோபம்...! பதில் சாபம் ஈந்தனர் "கண்டகியான நீ ஜடரூபியாகக் கடவாய்" என்று...! இப்படி ஒருவருக்கொருவர் பயங்கர கலவரம்..! கலவரம் அடங்கி ஒருவருக்கொருவர் பயம் உண்டாயிற்று..! இறுதியாக ஸ்ரீமந் நாராயணனின் பாதம் பணிந்து சாப விமோசனம் கேட்டனர். அதற்கு அவர், " இட்ட சாபங்களை மீட்க முடியாது" என்றுரைத்தார். (இதைத்தான் வள்ளுவனும் "வாயினால் சுட்ட வடு" ஆறாது என்றானோ..?). ஆனால் ஒரு வழி காட்டினார்...! (உய்யும் ஒரே வழி அரங்கன் திருவடியே..!) என் பக்தர்கள் இருவர் யானையாகவும் முதலையாகவும் இவ்விடத்தில் மோக்ஷம் அடையப்போகிறார்கள்..! இறந்தபின் அவர்களது சரீரத்திலிருந்து வஜ்ரகீடம் எனும் புழுக்களாக ஜனியுங்கள்..! கண்டகி கங்கையிற் புனிதமான நதியாய் உதயமாகுவாள்...! இந்த இடத்திலிருந்து பத்து யோஜனை தூரத்தில் சக்ர தீர்த்தம் நான் நித்யவாஸம் செய்யும் தீர்த்தம் உள்ளது. அங்கு கிடைக்கும் சிலைக்கு "துவாரகா சக்ரம்" என்று பெயர்..! நீங்கள் இந்த மலையின் கற்களில் மறைந்து கொண்டு நதியில் வசிக்க வேண்டும்..! இதனால் இவளுடைய(கண்டகியின்) எண்ணமும் நிறைவேறும்..! நீங்கள் வசித்து உண்டாக்கிய சாளக்கிராம சிலையினையும் துவாரகா சக்ரத்தினையும் ஆராதிப்பவர்களுக்கு "என்னுடன் வைகுண்ட வாஸம் நிச்சயம்" என்று சொல்லிவிட்டு மறைந்தாராம்..!

## **சாளக்ராம மஹிமைகள் - 12 (24.11.2012)**

கர்தமப்ரஜாபதி என்பவருக்கும் தேவஹூதி என்பவளுக்கும் ஜயன், விஜயன் என்று இரு புதல்வர்கள். இவர்கள் மிக்க தர்மசீலர்கள், பரஸ்பர ஒற்றுமை உள்ளவர்கள், நித்யம் விஷ்ணு ஆராதனம் செய்பவர்கள், தூய ஒழுககம் உள்ளவர்கள். அவர்களது அரசன் மருத்தன் என்பவன் ஒரு யாகம் வளர்த்தான். அதற்காக ஜயன் மற்றும் விஜயனுக்கு அழைப்பு வந்தது. ஜயன்

யாகத்தின் பிரும்மாவாக அமர்ந்தான். விஜயன் யாகத்தினைச் சிறப்பாக செய்து பூர்த்தி செய்தான். அரசனுக்கு யாகம் நல்லபடியாக முடிந்ததில் பரம சந்தோஷம். இருவருக்குமாக சேர்த்து பொன்னும், பொருளும் ஏராளமாக அளித்து கௌரவித்தான். இருவரும் வீட்டிற்கு வந்தனர். தாம் கொண்டு வந்த பொன்னையும் பொருளையும் பிரிக்கலானார்கள். இந்த பாகப்பரிவினையின் போது இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. (சொத்து என்று இருந்தால் பெருமபாலனோர் வீட்டிலும் இன்றும் இதுதானே நடக்கின்றது..? பணம் ஒருவனின் குணத்தினை மாற்றிவிடும்..!) மூத்தவன் சரிபாதியாக எடுத்துக் கொள்வோம் என்றான். இளையவன் 'அவரவருக்குக் கொடுத்தது அவரவருக்கு' என்றான். கோபம் எகிறியது. மூத்தவன் இளையவனைப் பார்த்து "நீ பேராசைக் கொண்டதால் முதலையாக மாறக் கடவாய்" என்று சபித்தான். இளையவன் அவன் பங்கிற்கு "நீ மதம் கொண்டு பேசுவதால் மதயானையாக போவாய்" என்றான்.

சாபத்தின் விளைவினால் ஜயன் "கஜேந்திரன்" என்ற யானையாக மாறினான். விஜயன் முதலையாக மாறி கண்டகி நதியின் அருகில் உள்ள ஒரு தடாகத்தில் அமிழ்ந்து வளர்ந்தான். இருவர் சொரூபம் மாறினாலும் அவர்களது விஷ்ணு பக்தி வளர்ந்து கொண்டேதானிருந்தது. ஒரு நாள் திருமாலை பூஜிக்க, தடாகத்திலுள்ள தாமரைப்பூ ஒன்றினைப் பறிக்க, கஜேந்திரன் இறங்கியபோது, முதலை தன் கூரிய பற்களால் அதனது காலைக் கவ்வி இழுத்தது. பகவானை உதவிக்கு அழைத்துக் கதறியது கஜேந்திரன். சடுதியாய் வந்த பகவான் சக்ராயுதத்தினால் முதலையை அறுத்து கஜேந்திரனை மீட்டார். இருவருக்கும் பகவானைக் கண்ட பேறும் சாப விமோசனமும் கிடைத்து பரமபதம் கிட்டியது. பகவானின் சக்ராயுதம் பட்டதினால் மலையில் உள்ள கற்களெல்லாம் "சக்ர சின்னம்" கிடைக்கப்பெற்றது. இந்த கற்கள்தாம் "துவாரகா சிலா" என்று அழைக்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சி நடந்த இடம் "ஹரி க்ஷேத்திரம்" என்று விளங்குகிறது. அந்த தடாகம் "சக்ர தீர்த்தம்" என்று அருளப்பட்டது. "ஸாள மரங்கள்" என்ற ஒரு வகை புனித மரங்கள் இங்கு அடர்ந்து காணப்படுவதால் இந்த இடத்திற்கு "சாளக்கிராமம்" என்ற பெயரும் உண்டு..!

தூய பக்திக் கொண்ட கஜேந்திரன் மற்றும் முதலையின் சரீரத்திலிருந்து தேவர்கள் அவர்களது சாபத்தினால் வஜ்ரகீடம் என்ற புனிதமான

புழுவானார்கள். கண்டகி, நதியானாள். தெய்வீக சாளக்கிராமமும் உருவானது.

**ஆக “கஜேந்திரம் மோக்ஷம்“ நடைபெற்ற இடம் இதுதான் என்கிறது இந்த சாளக்கிராம மஹாத்ம்யம்.**

துவாரகா சிலையினையும், சாளக்கிராம சிலாவினையும் சேர்த்து ஆராதிப்பவர்க்கள் விஷ்ணுவின் சாயுஜ்யம் அடைந்து பெருவாழ்வு வாழ்வர்..!

## சாளக்கிராம மஹிமைகள் - 13 (29.11.2012)

நேபாளத்தினை, ராஜா ஆண்ட வரையில், சாளக்கிராமங்கள் அனைத்தும் ராஜாவின் அரண்மனைக்குத்தான் சொந்தமாகயிருந்தது. யாரேனும் பிராமணர்கள் தமக்கு சாளக்கிராமம் வேண்டுமென்றால் கண்டகியிலிருந்து பொறுக்கிக் கொள்ளலாமாம். ஆனால் அந்த சாளக்கிராமம் அவர்களது கையோடு ஒட்டிக் கொண்டு கீழே விழக்கூடாதாம்..! அப்படி யாருக்காவது நேர்ந்துள்ளதா என்று தெரியவில்லை..! ஹாட்ஸன் என்ற ஒரு ஆங்கில பிரபு இந்த பரிசோதனையை நேரில் கண்டதாக ஒரு குறிப்பு உள்ளது..! மிக மிக அபூர்வமான சாளக்கிராமம் என்றால் அது தண்ணீரில் போட்டால் மிதக்க வேண்டும். இம்மாதிரி மிதப்பவைகள் மீன் அல்லது ஆமை போன்று சிலசமயம் நீந்தவும் செய்யும். இவைகள் மிக மிக மிக அபூர்வமானவை..! பகவான் விஷ்ணு பிரத்யக்ஷமாக உள்ள புனிதம் இது..! இது கிடைக்கப்பெற்றவர் முற்பிறவியில் பெரிய புண்ணியம்

செய்தவராகயிருப்பர்..!

சில சாளக்கிராமத்தின் உள்ளே ஜலம் நிரம்பியிருக்கும். மிக்கக் கருமை நிறம் வாய்ந்ததாகயிருக்கும். பளபளப்பாகயிருக்கும். இதனை கையில் எடுத்து பார்த்தோமேயானால் குளிர்ச்சியாகயிருக்கும். இது மிக மிக அபூர்வமானது. மிகுந்த மதிப்புள்ளது. சாந்நித்யம் நிரம்ப உடையது. இது இருக்குமிடம் குளிர்ந்து இருக்கும். இந்த சாளக்கிராமத்தினை அடையப் பெற்ற கோவில்கள், கிரஹங்கள் தெய்வீகமானவை. இதில் ஜல சத்துக்கள் இருக்கின்றன. புனித கண்டகி தேவதை வசிக்கின்றாள். வஜ்ரகீடம் என்னும் அந்த தெய்வீக பூச்சியும் இதற்குள் வசிக்கின்றது என்பர். இத்தகைய அபூர்வமான சாளக்கிராமமானது “ஜலஜா“ என்றழைக்கப்படுகின்றது..!

நம்மிடத்து பரவலாக புழங்குவது, கடினமான சாளக்கிராமங்களே ஆகும். இது கடினமானது. விஷ்ணுவின் குறிகளை கொண்டதாகும். இவைகள் “ஸ்தலஜா“ என்றழைக்கின்றார்கள்.

இந்த “ஸ்தலஜா“ வகை சாளக்கிராமமானது இரண்டு வகைப்படும்.

1.“மத்தா“-- கெட்டியாகயிருக்கும். பளபளப்பு சற்று கம்மியாகயிருக்கும். சற்றே பசுமை நிறமாகக் கூடயிருக்கும். லக்ஷணங்கள் இருக்கும்.

2.”கேஸரா”-- இவைகள் பல இழைகள் நிறைந்த ஒரு கோர்வையாகயிருக்கும். லேசாகயிருக்கும். தண்ணீரில் மிதக்கும்.

இவையும் மிகுந்த மதிப்புடையவை.

தரமான சாளக்கிராமங்களை, பாலிலோ அல்லது

அரிசிப்பானையிலேயோ வைத்து சற்று காலம் கழித்து பார்த்தால்

எடை கூடியிருக்கும். இவைகள் மிக மிக பவித்ரமானவை

இதுவரை சாளக்கிராமத்தினை பூஜிப்பதானால் ஏற்படும் நன்மைகள்,

இவைகள் பற்றி புராணங்கள் சொல்லும் ஏற்றங்கள், இதன் புராண

வரலாறு, சாளக்கிராமத்தில் உள்ள பல்வகை பிரிவுகள் என பல

கண்டோம்..! இனி இதனுடைய லக்ஷணங்கள் அறிந்து எந்த

மூர்த்தி இவைகள் என்று காண்போம்..!

## சாளக்கிராம மஹிமைகள் - 14 (1.12.2012)

பகவான் ஸ்ரீமந் நாராயணன், ஞானம் சக்தியில்லாதவர்களும், தன்னடி சோதி சேர வேண்டும் என்ற அபாரமான கருணையினால், தன்னைத்தானே சுருக்கிக்கொண்டு, சாளக்கிராமத்தினைக் கோயிலாய் கொண்டு எளிமையாய எழுந்தருளியுள்ளான். இந்த சாளக்கிராமத்தினை பூஜிக்க விஸ்தாரமான இடம் வேண்டாம் - ரொம்ப செலவு வேண்டாம். அன்போடு ஒரு சொம்பு ஜலம் கொண்டு செய்யும் திருமஞ்சனம் போதும். அபரிமிதமான பலன்கள் உண்டு.

இரண்டு சாளக்கிராமங்கள் வைத்து ஆராதனை செய்யக்கூடாது. ஒன்று அல்லது மூன்று அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையில் வைத்து பூஜைகள் செய்யலாம்.

எந்த கிருஹத்தில் 12 அல்லது அதற்கு அதிகமான சாளக்கிராமங்கள் இருக்கின்றனவோ அந்த இடம் ஒரு திவ்யதேசத்திற்கு சமமானது. அந்த இடத்திற்கு “ஸ்பரிச தோஷம்” கிடையாது.

ஸ்வயம்வயக்த க்ஷேத்திரங்களில் சாளக்கிராமம் அதிக முக்யத்துவம் வாய்ந்தது. எப்போதும் பகவானின் சாந்நித்யம் அங்கு நிறைந்திருக்க இந்த சாளக்கிராமங்கள் அவசியம் தேவை. பகவத் ஆராதனம் நின்றுபோனால் கூட இந்த சாளக்கிராமங்கள் இருந்தால் அதிக லோபம் ஏற்படாது. ஆகவே ஒவ்வொரு விஷ்ணு கோவிலிலும் ஒரு சாளக்கிராம மூர்த்தியாவது அவசியம் தேவை.

சாளக்கிராமத்தில் நெல்லிக்காய் அளவு உள்ளது அதிக மதிப்புள்ளது. பூஜிக்க எளிது.

நமக்கு மூன்று விதமான சாளக்கிராமங்கள் கிடைக்கின்றன.

1) எந்தவித துவாரமும் ரேகையும் இல்லாமல் கூழாங்கல் போன்று வழவழவென்றும், கருமையாக பளபளவென்றும் இருக்கும். இதற்கு "**ஹிரண்யகர்ப்பம்**" என்று பெயர். இவைகள் பூஜைக்கு உகந்தவைகள்தாம். ஆனால் மிகுந்த மதிப்புள்ளவைகள் கிடையாது.

2) சரிபாதியாய் உடைந்து இருபுறமும் சக்ரங்கள் பொறி காணப்படும்

3) துவாரத்துடன் கூடிய சக்ரங்கள் மற்றும் சில விஷ்ணுவின் ஆயுதங்கள் குறித்த சின்னங்கள் காணப்படும். இவை பூஜைக்கு மிகவும் உகந்தவை.

சாளக்கிராமம் சில வர்ணங்கள் மாறுபட்டும் கிடைக்கின்றது.

இதில் மிக அதிக துவாரங்கள் உள்ளவைகள், மிக மிக அகண்ட வாய் உடைய சாளக்கிராமங்கள் ஆகியவற்றினை நாம் விலக்குதல் நலம்.

சாளக்கிராமத்தினை நாம் விலைக் கொடுத்து வாங்குதல் கூடாது என்கின்றன சாஸ்திரங்கள்.

சாளக்கிராம தானம் செய்வது பூதானத்திற்கு சமானம் என்றும் சொல்கின்றன அவைகள்..!

## சாளக்கிராம மஹிமைகள்-15 (2.12.2012)

நேற்று ஒரு வாசகர் இரண்டாக பிளந்த சாளக்கிராமத்தினை பூஜிக்கலாமா..? என்று கேட்டுள்ளார். இரண்டாக பிளந்திருந்தாலும், பல துண்டுகளாக உடைந்திருந்தாலும் அவைகள் தெய்வீகமானவையே..! தோஷமில்லை..! என்கின்றது பாத்ம புராணம். கையொடிந்த குழந்தையை விடடுவிடுவோமா என்ன..? அதுபோன்று பின்னமானலும் ஆராதிக்க வேண்டும் என்கின்றது பாத்மம். "மிக அகண்ட வாயுள்ளதையும், நிறைய த்வாரங்கள் உள்ளதையும் ஏன் ஒதுக்கவேண்டும்" என்று ஒருவர் வினவியுள்ளார். மிக அகண்ட வாயுள்ளது வம்ச நாசத்தையம், அதிகத் துவாரங்கள் கொண்டது கோள் சொல்லும் தன்மையையும் உண்டாக்கும் என்கின்றது சாளக்கிராம சிலோத்பத்தி என்னும் கிரந்தம்.

இது மேலும், மிருதுவான சாளக்கிராமங்கள் பூஜிப்பவரின் இஷ்டானுகூலத்தினையும், சிறியது மோக்ஷத்தினையும், குளுமையானது ஆனந்தத்தையும், கருமையானது கீர்த்தியையும், சிகப்பு வர்ணமானது ராஜத்வத்தையும், நீல நிறம் சம்பத்தையும், பச்சைவர்ணம் விருத்தியையும், புஷ்டியையும், மஞ்சள் வர்ணம் தனத்தையும் கொடுக்கும் என்கின்றது. பழுப்பு வர்ணம் சந்யாஸிகள் ஆராதிக்கத்தக்கது எனவும் கூறுகின்றது.

சரி..! இனி சாளக்கிராம லக்ஷணங்கள் பற்றி சற்று ஆராய்வோம்..!

1) வாஸுதேவன் -- நன்கு கருப்பாகயிருக்கவேண்டும். துவாரத்தில் இரண்டு சக்கரங்கள் இருக்க வேண்டும்.

2) சங்கர்ஷணன் - சிகப்பு வர்ணம் - துவாரத்தில் இரண்டு சக்கரங்கள்.

3) ப்ரத்யும்ணன் -- நீல வர்ணம். வெகு த்வாரங்கள் இருக்கும். நுட்பமான சக்ரங்கள் இருக்கும். (வெகு த்வாரங்கள் உள்ளனவே என்ற கவலை இதற்கு வேண்டாம்..!)

4) அநிருத்தன் -- மஞ்சள் வர்ணம் - பத்ம (தாமரை) முத்ரையுடன் கூடியது.

5) நாராயணன் -- கருமை நிறம் - வட்டமாகயிருக்கும் - நீண்ட துவாரம் உள்ளது.

## சாளக்கிராம மஹிமைகள்-16 (3.12.2012)

ஸ்ரீதத்துவம் என்னும் கிரந்தம் உபநயனம் ஆனவர்கள் மட்டுமே சாளக்கிராம பூஜைகள் செய்யலாம் என்கின்றது. சிலர் "சமாஸ்ரயணம்" செய்து கொண்டவர்கள் தாராளமாகச் செய்யலாம் என்கின்றனர். பெண்கள் சாளக்கிராமத்தினைத் தொட்டு பூஜைகள் செய்யலாகாது. இவர்கள் தரிசித்தாலோ அல்லது பூஜைக்கு உதவிகள் செய்தாலே போதும்..! நிறைய பலன்கள் உண்டு..!

பிரும்ஹச்சாரிகள், சந்யாசிகள் பலசக்ர ரேகைகளுடன் உள்ள சாளக்கிராம மூர்த்தியினை ஆராதிக்கவேண்டும். கிருஹஸ்தர்கள் ஸௌம்யமான மூர்த்திகளை ஆராதிக்கவேண்டும்.

ஸ்ரீதத்துவம் மேலும், "வீட்டில் இரண்டு லிங்ககள், இரண்டு துவாரகா சக்ரங்கள், இரண்டு சங்கங்கள், மூன்று கணபதி மூர்த்திகள், மூன்று தேவி மூர்த்திகள் என பூஜிக்கக்கூடாது. இரட்டைப்படையான, அதாவது 4, 6, 8, 10, 12 என்ற கணக்கில் (இரண்டு மட்டும் கூடாது) சாளக்கிராமங்களை பூஜிக்கலாம். ஒற்றைப்படையான எண்ணிக்கையில், அதாவது 3, 5, 7, 9 என்ற எண்ணிக்கையில் பூஜிககக்கூடாது ஆனால் ஒரு சாளக்கிராமத்தினை பூஜிக்கலாம்" என்கிறது.

இனி சில சாளக்கிராம லக்ஷணங்களைக் காண்போம்..!

தாமரைச்சின்னமும், சக்ர சின்னமும், ஒரு பிந்துவம், பின்புறம் துவாரமும் உள்ளது பரமேஷ்டி.

விஷ்ணு :: பெரிய சக்கரத்துடனும், நடுவில் ரேகைகளுடனும் இருக்கும்.

நரஸிம்ஹன் :: நன்கு கருப்பாகயிருக்கும். பெரிய சக்ரம். ஐந்து பிந்துக்கள் இருக்கும். இது அக்னி புராணம் சொல்லக்கூடிய லக்ஷணம்.

ஸ்ரீகருட புராணம் " நரஸிம்ஹ சாளக்கிராமம் பசும் பொன் நிறமாகவும், கபில (?) நிறமாகவும் இருக்கும்.. மார்பு உயர்ந்து மூன்று அல்லது ஐந்து பொட்டுக்களுடன் (பிந்துக்கள்) இருக்கும்" என்கிறது.

இவை இரண்டுமே நரஸிம்ஹ சாளக்கிராமத்திற்கு பொருந்தும்.

வராஹம் :: முக்கோண வடிவமாயிருக்கும். இடது புறம் இரட்டை சுழியிருக்கும் இரண்டு சமமில்லாத சக்ரங்கள் இருக்கும். ( அக்னி புராணம்) நீண்ட முகத்துடனும், பூவளையத்தினால் சூழப்பட்டதாயும், துவாரத்தில்

சக்ரத்துடனும் இருக்கும் (ஸ்ரீதத்துவம்)
மேலும் பல கொஞ்சம் கொஞ்சமாகப் பார்ப்போம்..!

## சாளக்ராம மஹிமைகள்-17 (5.12.2012)

சாளக்கிராமத்திற்கு "ப்ராண ப்ரதிஷ்டை" எனும் விக்ரஹத்திற்கு செய்யவேண்டிய க்ரியையை செய்ய வேண்டியதில்லை. ஸ்ரீமந் நாராயணன் தாமாகவே விருப்பப்பட்டு அதில் அருள்பாலிக்கின்றான். இந்த புனிதமான. தரமான சாளக்கிராமங்கள் யாரொருவர் பூர்வ புண்ணியங்களோ அல்லது நல்ல பக்தியுள்ளவராகயிருக்கின்றாரே, அவருக்குத்தான் அவனது அருளால் கிடைக்கும். சாளக்கிராமங்கள் ஒருவரது கிருஹத்தில் நன்கு ஆராதிக்கப்படுமானால் அதனால் அவரது கிருஹமும் அதனைச் சுற்றிலும் சுபபலன்களே கிடைக்கும்.....! சோதனைகள் பல வந்தாலும் அதனை சந்தித்து சாதனைகளே செய்வர். யமதூதர்களும் நெருங்க பயப்படுவர்.
மத்ஸ்ய புராணம், அக்னி புராணம், கருட புராணம், பத்ம புராணம், ப்ருஹந் நாரதீயம் முதலான புராணங்கள் சாளக்ராமத்தினைப் பற்றி பரக்க புகழ்கின்றன.
சக்தியற்றவர்களும், ஸ்தீரிகளும் தினந்தோறும் பால், அன்னம் முதலியவைகளை சமர்ப்பித்து கற்பூரஹாரத்தி செய்து வந்து, யாரேனும் தகுதியுடையவர்கள் அவர்களது கிருஹத்திற்கு வரும் போது முதலில் பாலினால் திருமஞ்சனம் செய்வித்து பின்பு பூஜைகளைச் செய்யலாம்.
சாளக்ராம லக்ஷணங்கள் ::
கூர்மம :: கருப்பு அல்லது இந்திரநீல வர்ணம். வட்டமாகயிருக்கும். முதுகு பெருத்திருக்கும். ஸ்தூலமாகயிருக்கும். மூன்று ரேகை உள்ளது. (அக்னி புராணம்)
மேற்கூறிய லக்ஷணங்களுடன் பின்பாகம் சற்று உயர்ந்தும், ஆவர்த்த ரேகைகளுடனும் இருக்கும். இது மிகவும் சுபம் தரவல்லது (அக்னி புராணம்)
மஹாகூர்மம் ::
வட்ட வடிவம். வனமாலை, தாமரைமலர், சக்ரம் ஆகிய குறிகளுள் ஏதேனும் ஒன்றோ அல்லது சில இருக்கும். புரசம்பூவினைப் போன்று தங்கநிறமான அழகான புள்ளிகளுடன் இருக்கும். இது மிக மிக அபூர்வமானது.
(ஸ்ரீதத்வநிதி)

கூர்ம வராஹ மூர்த்தி ::
இரண்டு புள்ளிகளுடன் கூடிய சக்ரரேகை அல்லது சங்க ரேகை. பஞ்சாயுதங்களும் சுத்தமாகவும், தெளிவாகவும், பிரகாசமாகவும் காணப்படும். இது சர்வாபீஷ்டங்களையும் தரவல்லது. எளிதில் எவருக்கும் கிடைக்காதது.

## சாளக்கிராம மஹிமைகள்-18 (7.12.2012)

அடியேன் எழுதி வரும் சாளக்கிராமங்கள் பூஜைகளினால் உண்டாகும் பலன்களைப் படித்த சிலர், “உண்மையிலேயே நடக்குமா..?“ என்று ஐயம் கொண்டு வினவினர். மனம் ஒன்றி செய்யும் கார்யங்கள்தாம் பலிதமாகும். பலனை எதிர்பார்த்து எதனையும் செய்யாதீர்கள். எதிர்பார்ப்பு என்றிருந்தால் பின்னாலேயே ஏமாற்றம் என்னும் அதனுடைய மறுபக்கமும் நம்மை அடையலாம்..!
உங்கள் செயலை செவ்வனே செய்யுங்கள்..! இது நடக்குமா..? நம்மால் ஆகுமா...! போன்ற ஐயங்கள் ஏதும் வேண்டாம். அருளுவதும்... அருளாததும் அரங்கன் இஷ்டம்...!
பகவான் தானே எந்தவித படாடோபமும் இல்லாமல், நம்மையெல்லாம் உஜ்ஜீவிக்க, எளிமையாக நம்மை அடையும் ஒரு சொரூபம் சாளக்கிராமம் என்னும் புனிதம்...! அலட்சியம் வேண்டாம்....! அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள்..!
” சாளக்ராமஷிலா யத்ரதேவோ த்வாரவதி பவ: உபயோ: சங்கமே யத்ர யத்ர முக்தி: ந சம்சய:"
இதன் அர்த்தம்:: "ஸாளக்ராம சிலை எங்கெங்கு இருக்கின்றதோ அங்கெல்லாம் விஷ்ணுவும், த்வாரவதியும் இருக்கின்றார்கள். இந்த இருவர்களின் சங்கமத்தோடுயிருக்கும் இவர்களை பூஜிப்பவர்களுக்கு முக்தி என்னும் பெரும்பேறு நிச்சயம் - சந்தேகமே வேண்டாம்." என்கின்றது கருட புராணம்..!
த்வாரவதி - த்வாரம் என்றால் தலைவாசல் அல்லது நிலைவாசல் ஆகும். இந்த வாசலின் முகப்பில் மஹாலட்சுமி வாசம் செய்கின்றாள். இவளுக்கு “த்வாரவதி“ என்று பெயர். இந்த த்வாரவதிக்கு தினந்தோறும் முடியவிடினும்

வாரந்தோறும் வெள்ளிக்கிழமையாவது சாம்பிராணி தூபமிடுங்கள்.
கிருஹத்தில் லக்ஷ்மி தங்குவாள். லக்ஷ்மீ கடாக்ஷம் உண்டாகும்.
கண்ணேறுகள் (திருஷ்டிகள்) அகலும்..! இதுபோன்று சாளக்கிராமத்தின்
முகப்பிலும் மஹாலட்சுமி வாஸம் செய்கின்றாள்..!

சாளக்கிராம லக்ஷணங்கள்

மத்ஸ்யம் ::

மத்ஸ்யம் என்பது நீண்ட தாமரைப்பூ போன்றிருக்கும்..! வாயில்
கோடுகளுடனிருக்கும்..! (கருட புராணம்)
இது நீண்ட ரூபமாயும், மேலில் மூன்று புள்ளிகளுடனும், மழமழப்பாகவும்
இருக்கும்..! சக்கரமும் துவாரமும் இருக்காது..! (அக்னி புராணம்.)
நீண்டதாய், காசமணி போல் வண்ணமுள்ளதாய், மூன்று பிந்துள்ளதாய்
இருப்பது மத்ஸ்ய மூர்த்தி (இதுவம் அக்னி புராணத்திலுள்ளது..)
மீனின் உருவம் போன்ற சிலையும, உள்ளில் சக்ரரேகையும்,
ஸ்ரீவத்ஸாகாரம் போன்ற பிந்துவும், மாலையுடன் இருப்பதாகும். இது சகல
சுகங்களையும் அளிக்கவல்லது (ஸ்ரீதத்துவம்)
மீனைப்போன்ற வடிவம். மிகுந்த வழவழப்பானது. மேலே புள்ளிகள்.
துவாரத்தில் இரண்டு தெத்துப்பற்கள் போன்ற அமைப்பு. (ஸ்ரீதத்துவம்)
மேற்கூறிய லக்ஷணங்களில், இந்த புராணங்களில், ஏதேனும் ஒன்றில்
சொல்லப்பட்டிருக்கும், லக்ஷணங்கள் காணப்பட்டால் அதுவே மத்ஸ்ய
மூர்த்தி என்று அறியவும்.

## சாளக்கிராம மஹிமைகள் - 19 (11.12.2012)

சாளக்கிராமசிலா புண்யா பவித்ரா தர்மகாரிணி ! யஸ்ய தர்சனமாத்ரேன ப்ருமஹ சுத்தேயே நர: !! தத் கிருஹம் சர்வ தீர்த்தானாம் ப்ரவரம்ஸ்ருதிநோதிதம் ! யத்ரயம் சர்வதா மூர்த்தி: சாளக்கிராமசிலா சிலா !! --- பத்ம புராணம் ---

சாளக்கிராம சிலையானது புண்யம், பரிசுத்தம் மற்றும் தர்மம் முதலான அனைத்திற்கும் காரணமாகவுள்ளது. அதனை தரிசித்த மாத்திரத்தில் மனிதன் பவித்ரம் அடைகின்றான். அந்த கிருஹத்திற்கும் ஸர்வ ...

தீர்த்தங்களின் ப்ரபாவங்கள் உண்டாகும். அந்த சிலாவில் உள்ள பகவானின் தரிசனம் என்றும் சுபமே தரும். மஹா புண்யங்களைத் தரும்.

சாளக்கிராம லக்ஷணங்கள்

ஹயக்ரீவர் ::

நீல நிறமாகயிருக்கும். பிந்து இருக்கும். அங்குசம் போன்ற கைரேகையிருக்கும். அல்லது அங்குச ரூபமாகவேயிருக்கும். புள்ளிகள் காணப்படும். (அக்னி புராணம்).

அங்குச வடிவமான முகம். நீளமான பிந்துக்கள் உள்ளது. நன்கு பழுத்த நாவற்பழம் போன்ற நிறமுடையது. (ஸ்ரீ தத்வம்)

இந்த மூர்த்திகள் கிடைக்கப்பெற்று பூஜைகள் சரிவர செய்தால் அபாரஞானமும், சீலமும் உண்டாகும். நல்ல ஞானமுள்ள குழந்தைகள் பிறப்பார்கள்..!

இன்னொரு மூர்த்தி அங்குச ரேகையுடன் காணப்படும். ஆனால் உயரமான வடிவமைப்புக் கொண்டது. ஒரே ஒரு வட்டமான சக்ரம் கொண்டிருக்கும். இது “அம்புஜா” எனப்படும் மூர்த்தியாகும். இது புத்ர பாக்யத்தினையும் சர்வ அபீஷ்டங்களையும் தரவல்லது.

## சாளக்கிராம மஹிமைகள் - 20 (14.12.2012)

நம் கிருஹத்தில் சாளக்கிராமங்களுக்குத் திருமஞ்சனம் செய்தபின் அவைகளை நன்கு துடைத்து, தூபம் காட்டி ஆசனத்தின் மேல் எழுந்தருளச் செய்யவேண்டும்.

கோவிலில் என்றால் திருமஞ்சனம் ஆனபின் சாளக்கிராமங்களைத் துடைக்கக்கூடாது. தூபம் காட்டி அப்படியே எழுந்தருளச் செய்ய வேண்டும்.

பினனால் சாளக்கிராம பூஜைகளைப் பற்றி எழுதும் போது இதனை விரிவாகக் காண்போம்..!

சாளக்கிராம லக்ஷணங்கள்

ஸ்ரீதர மூர்த்தி :: உருண்டை வடிவம். மேல் பாகத்தில் ஐந்து கோடுகள். துவாரத்தினுள் வனமாலை சின்னம். (அக்னி புராணம்)

நெருக்கமான புற்களை போன்ற நிறமுடையது. வனமாலை சின்னம். சிறிது விஷமமான (?) சக்கரமுடையது. இது சகல சம்பத்துக்களையும் அளிக்கும் (ஸ்ரீதத்வம்)

வாமனர் :: மிகச் சிறிய உருண்டை வடிவும். நீல வர்ணம். ஓரேயொரு புள்ளியுடன் கூடியது. (அக்னி புராணம்)

இந்திரநீல நிறம். வனமாலை, தாமரைமலர் சின்னம் இவையிரண்டில் ஒன்று அல்லது இரண்டும் சேர்ந்து காணப்படலாம். குட்டையாகவும் உருண்டையாகவம் இருக்கும்

காயாம்பூவைப் போன்ற நிறம். மேலே புள்ளிகள். துவாரத்தில் குண்டலம். வாயின் உள்ளே புள்ளிகள். சிறிய உருண்டை வடிவம் (ஸ்ரீதத்வம்).

பரசுராமர் :: கோடாலியைப் போன்ற ரேகை. அருகம்புல்லைப் போன்ற பச்சை நிறம். உயரமானது. நாபியில் சக்ரரேகை. (ஸ்ரீதத்வம்)

## சாளக்கிராம மஹிமைகள் - **21 (16.12.2012)**

அவந்திதேசம் என்று புராணங்களில் சொல்லப்படும் தேசமே தற்போதைய நேபாளமாகும். இங்கு இமயமலையின் மீதுள்ள ஹரிபர்வதம் என்னும் மலையில்தான் கண்டகி உற்பத்தியாகின்றாள். அதில் உற்பத்தியாவதுதான் சாளக்கிராமம். இதில் 14 விதமான உலோக சக்திகள் உள்ளன. இந்த உலோக ரேகைகள் சாளக்கிராமத்தில் காணப்படும். இந்த கண்டகி நதியில் நாம் முதலில் சிறிதளவு துளசியினைச் சேர்த்துவிட்டு, சாளக்கிராமம்

கிடைக்க மனதார பிரார்த்தனைச் செய்து விட்டு பின்புதான் நீராடல் வேண்டும். ஹரியின் அருள் இருப்பின் சாளக்கிராமமும் கிடைக்கும்.

சாளக்கிராம லக்ஷணங்கள் ::

ஸ்ரீராமர் :: வில்லைப் போன்ற ரேகை. பெரியதாயும், நீளமாகவும், பச்சை நிறத்துடனும், புள்ளிகளுடனும், நாபியில் சக்ர ரேகையும், பல த்வாரங்களுடனும் இருக்கும். (ஸ்ரீதத்வம்)

சீதாராமர் :: கோழிமுட்டை வடிவம். குண்டலரேகை. த்வாரத்தில் சமமான இரண்டு சக்ர ரேகை அல்லது கல்பவிருக்ஷ ரேகை இடதுபாகத்தில் சிரஸிற்கு அருகே சக்ர ரேகை. இது புக்தி மற்றும் முக்தியினைத் தரும்.

கோபால மூர்த்தி :: நாவற்பழம் நிறம். புள்ளிகள். பின்பக்கத்தில் த்வாரம். மகரகுண்டலம். நெற்றியின் இடது பக்கத்தில் பாணரேகை. அழகாகயிருக்கும். சத்ருக்களை நாசம் செய்யும். புத்ரபிராப்தியினைத் தரும். சர்வமங்களஙகளையும் தரும்.

கிருஷ்ணர் :: உருண்டை வடிவம். கருப்பு நிறம். சிறிய துவாரமிருக்கும்.

ஹிரண்ய கர்ப்பம் ::

வெண்மை நிறம். வழவழப்பு. பெரியது. உயரமானது. த்வாரத்தில் சக்ரரேகை. (ஸ்ரீதத்வம்)

சிறிய கோழிமுட்டை வடிவம். எந்தவித லக்ஷணங்களும் இல்லாமல் கருநீல நிறமாய், வழவழவென்று அழகாக இருப்பதும் ஹிரண்யகர்ப்பமே என்பர் சிலர்.

## சாளக்கிராம மஹிமைகள்-22 (30.12.2012)

"நம்பிள்ளை ஒரு நாள் நஞ்சீயரிடத்து ஸ்ரீபாஷ்யம் வாசித்துக் கொண்டிருக்கின்றார். அதுசமயம் பெருமாளுக்கு அமுது தயாராகி விட்டது. நஞ்சீயர் நம்பிள்ளையை பெருமாளுக்கு அமுது செய்விக்கச் சொல்கின்றார்.

நம்பிள்ளை அதற்கு ‘அடியேனுக்கு திருவாராதனக் கிரமம் தெரியாது” என்கிறார். அதற்கு சீயர், ‘நானோ சாலக்கிராமம் திருவாராதனம் மட்டுமே அறிந்திருக்கின்றேன்!’ நீர் த்வயத்திலிலுள்ள இரண்டாவது வாக்யத்தினை (ஸ்ரீமதே நாராயணாய!) அநுசந்தித்து திருவடி விளக்கி அமுது செய்விக்க வேண்டியதுதானே?” என்றருளுகின்றார்.

அதற்கு நம்பிள்ளை, ‘பெருமாள் அர்ச்சாவதாரமாய் உகந்தருளின இடங்கள் பலவிடத்து இருக்க ஒரு இடத்திலே மட்டும் அமுது செய்தருளுவது எப்படி? என்கிறார். அதற்கு சீயர். ”த்வயத்தில் பூர்வம் (முதலில் உள்ள வாக்யத்தொடர்) உத்ரம் (இரண்டாவதாக உள்ள வாக்யம்) ஆகிய இரண்டிற்கும் நடுவே ‘ஸர்வமங்கள விக்ரஹாய” என்கிற விசேஷமான பதத்தினை உச்சரித்து அமுது செய்ய பண்ண வேண்டியதுதானே” என்று பதிலுரைக்கின்றார்.

இதனால் நாம் அறிவது நம் பூர்வாச்சார்யர்கள் த்வயமில்லாது வேறு மந்திரங்கள் கொண்டு திருவடி விளக்கமாட்டார்கள் என்பது தெளிவு!.”

சாளக்கிராமங்களை முதலில் திருமஞ்சனம் செய்யுங்கள்.

பின்பு,

“த்வயத்தில் பூர்வம்“ :: “ ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே..!“

நடுவே சேர்க்கவேண்டியது :: ஸர்வ மங்கள விக்ரஹாய

“த்வயத்தில் உத்ரம்“ :: “ஸ்ரீமதே நாராயணாய நமஹ..”

இப்போது பூர்வம், நடுவில் சேர்க்கவேண்டியது, உத்ரம் ஆகிய மந்திரங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இதன்படி திருவடி விளக்கி அமுது செய்யுங்கள்.

இது நஞ்சீயர் நமக்குக் காட்டிய எளிய வழி…!

திருவாராதனம் தெரிந்தவர்களுக்கு “சாளக்ராம ஆராதனம்“ பற்றிச் சொல்லிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை…!

ஆராதிக்கத் தொடங்கும்முன் ஒன்றேயொன்று தெரிந்து கொள்ளுங்கள்..!

“ஆராதித்தல்“ என்றால் “ஆழ்ந்த அன்பு“ என்றும் பொருள்..! கடமையே என்று செய்யாதீர்கள். நம் உற்ற தோழனுக்குச் செய்வது போல, நம் அன்பு மகனுக்குச் செய்வது போல, தம் தாய் தந்தையருக்கு அன்போடு செய்வது போல சாளக்கிராம மூர்த்திகளையும், கிருஹத்திலுள்ள இதர மூர்த்திகளையும் நேசியுங்கள். மனம் விட்டு ஆத்மார்த்தமாக உரையாடுங்கள்..! தெரிந்த மொழியில் ஆராதியுங்கள்..! உங்கள் வீடு கோவிலாகும்..! பூஜையறை சாந்நித்யம் பெறும்..!

## சாளக்கிராம மஹிமைகள்-23 (30.12.2012)

நிறைய நண்பர்கள் திருவாராதனம் குறித்து ஆர்வம் கொண்டுள்ளது கண்டு மிக்க மகிழ்ச்சி..! கூடிய விரைவில் இரு கலையார்களுக்கும் உள்ள திருவாராதனம் குறித்தும், இதனைச் சாராத இதர பேர்கள் செய்யும் ஆராதனைக் குறித்தும் எனக்குத் தெரிந்தவரையில் சொல்கின்றேன்..!

இப்போது சாளக்கிராமம் குறித்த ஒரு தியான ஸ்லோகம் காண்போம்..!

"துல்ய ப்ரபம் தபந கோடிபிரப்ஜ
சக்ர கௌமோதகீ தர விராஜித பாணி பத்மம் !
லக்ஷ்மீ மஹீ ஸஹித மாத்த விசித்ர பூஷம்
நாராயணம் கபிசவாஸ ஸமாஸ்ரயாமி..!!"

(ஒரு புனிதமான வஸ்துவில் உள்ள சிறிய துவாரத்தில், மஹா ஆச்சர்யமாக, தமது பஞ்சாயுதங்களுடனும், மஹாலக்ஷ்மியுடனும் வாஸம் செய்கின்ற ஸ்ரீமந் நாராயணனை எப்போதும் தியானிக்கின்றேன், வணங்குகின்றேன்..!)

(சமஸ்கிருதம் நன்கு அறிந்த எவரேனும் இருப்பின், இதில் ஏதேனும் தவறு இருப்பின் திருத்திட வேண்டுகின்றேன்..)

சாளக்கிராம மூல மந்திரம் ::

”ஓம் நமோ பகவதே விஷ்ணவே ஸ்ரீ ஸாளக்கிராம
நிவாஸிநே - ஸர்வாபீஷ்ட பல ப்ரதாய
ஸகல துரித நிவாரிணே ஸாளக்ராமாய ஸ்வாஹா..!!”

(சர்வ அபீஷ்டங்களையும் தரவல்லதும், வெகு சீக்ரமே நிவாரணம் அளிப்பதும், ஸாளக்கிராமம் என்னும் புனிதமான வஸ்துவில் நித்யவாஸம் செய்யும் ஸ்ரீமந் மஹாவிஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்..!

ஆராதிக்க விரும்புவர்கள் இவையிரண்டையும் மனனம் செய்து கொள்ளுங்கள்..!

சிறிது சிறிதாக ஆராதனம் கற்போம்..!

## சாளக்கிராம மஹிமைகள்-24 (6.1.2013)

**சக்ரங்களோடு கூடிய சாளக்ராமங்கள் விஷ்ணுவின் சொரூபமேயாகும்..! அடையாளம் காணமுடியாவிடின் ஸ்ரீவிஷ்ணுவை அதில் தியானம் செய்து வழிபடலாம்..!**

**“ஹரிர் உவாச :- நிர்லக்ஷணசுபா சக்ரான்விதசிலார்ச்சனாத்”**
**ஹரி சொல்கிறார் :: அடையாளங்களுடன் கூடின சாளக்கிராம சிலாக்களை விட, சக்ரங்கள் ஏதுமில்லாத சாளக்கிராம சிலாவினை பூஜிப்பது சுபம்.**

**இது சுலபம் கூட..! அவரவர் விருப்பப்படி அடையாளங்கள் இல்லாத சாளக்கிராமங்களில் அவர்களுக்கு உகந்த, விரும்பி வணங்கும் மூர்த்தியாகவே பாவித்து வழிபாடுகள் செய்யலாம்..!**

**விசேஷமாக செய்யமுடியவில்லையென்றாலும், சாளக்கிராமங்கள் நம் வீட்டில் இருப்பதே சுபம்.**

**சக்தியற்றவர்கள் பூஜை செய்யமுடியாவிடினும், அவற்றிக்கு பால் மற்றும் அன்னம் நிவேதனம் செய்து கற்பூரஹாரத்தி செய்து வந்தாலும், நன்மைப் பயக்கும்.**

**ஸ்தீரிகள் கூட தொடாமல் நைவேத்யம் செய்தால் போதுமானது.**

**வைணவர்கள் ஸமாஸ்ரயணம் செய்து கொண்டு ஆராதனம் தொடங்குதலும், இதர பேர்கள், குருவின் ஆசி பெற்று சாளக்கிராம ஆராதனைத் தொடங்குதலும் மிகவே நன்று..!**

**ஒன்றேயொன்று மிக மிக முக்யம்...! அது “ஹரி பக்தி..!”.**

**எந்த ஆராதனைத் தொடங்கும் முன்பும் ஐந்து சுத்திகள் மிக முக்கியம்..! அவைகள்**

**1) சரீர சுத்தி**
**2) ஸ்தல சுத்தி**
**3) பாத்ர சுத்தி**
**4) கர சுத்தி**
**5) மனஸ் சுத்தி**

**சிலர் கேட்கலாம் சரீர சுத்தியிலேயே கர சுத்தியும் அடக்கம்தானே என்று..!அதுவன்று..! கர சுத்தி மந்திர பூர்வமாகவும் செய்தல் வேண்டும்..!**

## சாளக்கிராம மஹிமைகள்-25 (7.1.2013)

பலர் சாளக்கிராம மஹிமைகளின் சாப்ட் காப்பியினைக் கேட்கின்றனர். எல்லாவற்றையும் தொகுத்து வைத்துள்ளேன். இத்தொகுப்பு இன்னும் இரண்டொரு பாகங்களில் முடிந்துவிடும். முடிந்தவுடன் இதனை ஒரு PDF File ஆக மாற்றித் தருகின்றேன்.

சாளக்கிராம த்யான ஸ்லோகம் குறித்து சில சந்தேகங்கள் உள்ளன. அதில் திருத்தங்கள் உள்ளது. எல்லாவற்றையும் திருத்தித் தருகின்றேன்.

நான் ஏற்கனவே சொல்லியிருந்தாற் போல், திருவாராதனக்கிரமம் இரு கலையாருக்கும் இங்குக் கொடுத்துள்ளேன்.

நீங்...கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களிடத்து உள்ள சாளக்கிராமங்களையும் விக்ரஹமாகவே பாவித்து இதிலுள்ளபடி திருவாராதனம் செய்தல் வேண்டும். அவ்வளவே..!

இது முடியாதவர்கள் அடியேன் ஏற்கனவே சொல்லியிருந்தபடி, நமக்கு நஞ்சீயர் காட்டியவழியில் த்வய மந்திரத்துடன் ஆராதனம் செய்யலாம்.

## சாளக்கிராம மஹிமைகள்- 26 (11.01.2013)

சாளக்கிராமங்கள் பொதுவாக பலவகைகள் உள்ளன என்று அறிந்தோம். இதில்

ஸ்ரீகிருஷ்ணர் சாளக்கிராமம் 16 விதமாகவும்
நரசிம்மர் 13 விதமாகவும், ராமர் 12 விதமாகவும், நாராயணர் 9 விதமும், கோபாலன் 6 விதமாகவும், கூர்மம், வராஹம், சுதர்ஸனத்தில் 4 வகையும், பலராமர், வாமனர், பரசுராமர், தாமோதரன், வாசுதேவன், முதலானவைகளில் 3 வகை சாளக்கிராமங்களும் கிடைக்கின்றன.

ஒரு சக்ரம் இருந்தால் சுத...ர்ஸன மூர்த்ி
2 சக்ரம் இருந்தால் - லக்ஷ்மீ நாராயணன்
3 சக்ரம் உள்பாகத்தில் இருந்தால் - திரிவிக்ரமன் (இது ஸ்ரீதத்வநிதியில் அச்சுதன் என விவரிக்கப்படுகிறது)
4 சக்ரங்கள் இருந்தால் ஜனார்த்தனன்
5 சக்ரங்கள் இருந்தால் வாசுதேவன்
6 சக்ரங்கள் இருந்தால் ப்ரத்யும்னன் (ஸ்ரீதத்வநிதி பிராகாரம் சங்கர்ஷணன்)
7 சக்ரங்கள் இருந்தால் சங்கர்ஷணன் (ஸ்ரீதத்வநிதி “வராஹர்“ என்கிறது)
8 சக்ரங்கள் இருந்தால் புருஷோத்தமர்
9 சக்ரங்கள் இருந்தால் நவவ்யூஹர் (ஸ்ரீதத்வநிதியின் படி “நரஸிம்ஹர்“)
10 சக்ரங்கள் இருந்தால் “தசாவதாரம்“ (ஸ்ரீதத்வநிதியில் “வாமனன்“ என விவரிக்கப்படுகின்றது)
11 சக்ரங்கள் இருந்தால் “அனிருத்தர்“ (ஸ்ரீதத்வநிதி “ பிரத்யுமனன்“ என்கிறது)
12 சக்ரங்கள் இருந்தால் துவாதசாத்மா. (ஸ்ரீதத்வநிதி “அநந்தன்“ என்கிறது வேறொரு இடத்தில் “பரமாத்மா“ என்றும் சொல்கிறது).

சில லக்ஷணபேதங்கள் இருந்தாலும் இந்த இரண்டு புராணங்களில் ஏதேனும் ஒன்றினை பிரமாணமாகக் கொண்டு பூஜிப்பின், இம்மை மற்றும் மறுமை ஆகிய இரண்டு பயணத்திலும், நன்மைப் பயக்கும்.

## சாளக்கிராம மஹிமைகள்-27 (20.01.2013)

சாளக்கிராம லக்ஷணங்கள் ஒரு புராணத்திற்கும் மற்றொரு புராணத்திற்குமே மாறுபடுவதை இதுகாறும் இத்தொடரினைக் கண்ணுற்ற வாசகர்கள் நன்கறிவார்கள்.

ஏதேனும் ஒரு புராணத்தினைப் பிரமாணமாகக் கொண்டு அதனையே நிதர்ஸனத்திலும் பற்றிக்கொண்டு பூஜித்திலே சிறந்ததாகும்.

இதுவரை சொன்ன லக்ஷணங்கள் ஏதுமே புரியவில்லை. என்னிடம் உள்ள சாளக்கிராமத்தினை எப்படி கண்டறிவது..? என்று கேட்போருக்கு..,

...கவலை வேண்டாம்..! நீங்கள் எந்த மூர்த்தியாக அதனை பாவிக்கின்றீரகளோ, அல்லது, எந்த மூர்த்தியினை அதிகம் நேசிக்கின்றீர்களோ., உங்களிடம் உள்ள “சாளக்கிராம மூர்த்தியினை” அதுவாகவே பாவியுங்கள். நேசியுங்கள். ஆராதியுங்கள். அன்புடன் ஆராதிக்கும் அந்த சாளக்கிராம மூர்த்தியும் அதுவாகவே ஆகும். நான் சொல்வது முற்றிலும் உண்மை.

“யத்பாவோ தத் பவதி“..!

கோபால பட்டர் என்ற எங்கள் அர்ச்சக வம்சத்தாரைச் சார்ந்தவர். இவர் பிறந்தது 15 வது நூற்றாண்டின் துவக்க ஆண்டாகும். ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் எனும் பகவான் கிருஷ்ணரின் அவதாரமானவர் கி.பி. 1512ல் ஸ்ரீரங்கம் வந்திருந்தார். (சிலர் 1510 என்கின்றனர்..!) அச்சமயம் கோபாலபட்டர் இவர்பால் மிகவே ஈர்க்கப்பட்டு இவரது ஆணைக்குட்பட்டு விருந்தாவனம் சென்றார். ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் பரமசீடராகி “கோஸ்வாமி“ என்னும் மிகப்பெரிய மரியாதையுடன் ஸ்ரீகோபாலபட்டர் கோஸ்வாமி எனும் நாமம் அடைகின்றார். இவர் ஆராதித்த மூர்த்திகள் “சாளக்கிராம“ மூர்த்திகளே ஆகும்..! ஒரு நாள் இரவு படுக்கச் செல்லும்முன் இவர், தாம் ஆராதித்த இந்த மூர்த்திகள் எல்லாம் சூக்குமமாகயுள்ளனவே..! அழகான விக்ரஹ மூர்த்திகளாய் இருந்தால் எப்படியிருக்கும்...!, என்று ஏங்கியபடியே உறங்கிப்போனார்.

மறுநாள் விடியற்காலை இவர் பூஜை செய்யக் கதவினைத் திறந்தபோது இவர் ஆராதித்த சாளக்கிராமங்களைக் காணோம். அவையனைத்தும் சேர்ந்து ஒரு அழகான, அற்புதமான, ஒரு விஷமத்தனமான மந்தஹாஸ நமட்டுசிரிப்புடன் கூடிய கிருஷ்ணராக, இவர் எதுவாக ஆகவேண்டும் என்று எண்ணி எண்ணி ஏங்கினாரோ அதுவாகவே ஆகியிருந்தது...! இவருக்கு ஆனந்தமான ஆனந்தம்..! பிரும்மானந்தம்...! "ஸ்ரீ ராதாரமண்" எனறு திருப்பெயரிட்டு அவரிடம் மையலுற்று, இவ்வையகம் தழைக்க வாழ்நத்தார் அந்த ஸ்ரீரங்கத்துப் பெருந்தகை..! இன்றும் விருந்தாவனத்திலே ஸ்ரீராதாரமண் மந்திர் உள்ளது. அங்கு இவருக்காக மாறிய அந்த குறும்பு கிருஷ்ணரும் உள்ளார்..!

அதனால்தான் சொன்னேன்..! "யத்பாவோ தத் பவதி"..!

## சாளக்ராம மஹிமைகள் - 28 (3.2.2013) முடிவுரை

இறைவன் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உள்ளான். இது "ஜீவ அந்தர்கத பிம்பம்" என்றழைக்கப்படுகின்றது. இது "நைஜ விபூதி".

சிற்பிகளால் வடிவமைக்கப்பட்டு பின்பு தெய்வீக வழிபாடுகளினால் உரு ஏற்றிய பிரதிமைகளிலும், பசுவின் உடலிலும், துளசி செடியிலும், தெய்வீக விருக்ஷங்களிலும் இறைவன் இருக்கின்றான். இது "அஹித விபூதி" ஆகும்.

சாளக்ராமத்திலும் மற்றும் தெய்வீகக் கார்ய அக்னியிலும்... அவனே பிரத்யக்ஷமாக உள்ளான். இது "சஹஜ விபூதி" ஆகும்.

இம்மூன்று விபூதிகளிலும் பகவான் சாளக்ராமத்தில் எழுந்தருளியிருக்கின்ற நிலை, அவனது அபாரமான கருணையாகும். இதற்கு தெய்வீக சக்தி ஏற்றவேண்டிய அவசியமேயில்லை. அதற்காக கற்று நன்கு தேர்ந்த பண்டிதர்களை தேட வேண்டியதில்லை. எந்தவித பிரதிஷ்டையும் அவசியமில்லை. அவனே சுயம்புவாய் தேர்ந்தெடுத்து அருள்பாலிக்கும் ஒரு அற்புத க்ஷேத்திரத்திற்கு சமமானது "சாளக்ராம"மாகும். ஒவ்வொரு சாளக்கிராமமும் ஒரு கோவிலாகும. அதனால்தான் பெண்டிர்கள் இதனைத் தொட்டு பூஜித்தலைத் தவிர்ப்பது

நலம். அவர்கள் பூஜைக்கு உதவிசெய்தலும் அதனைத் தரிசித்தலுமே எண்ணற்ற பயன்கள் தரவல்லது.

ஒரு உத்தரணி சாளக்ராம தீர்த்தம் பருகுதல், நம் பாபங்கள் அனைத்தையும் கரைக்கவல்லது. ஏனெனில் சாளக்ராம ரூபத்தில் பகவானே நம் எதிரில் இந்த தீர்த்தம் பருகும்போது நிற்கின்றான் அல்லவா..?

இந்த சாளக்ராமம் தொடர்பான சுலோகங்கள் சில உள்ளன. அதனை உங்களுக்கு PDF File ஆக தரும்போது இணைத்துத் தருகின்றேன்.

பிரும்மா, நாரத மஹறிஷியிடம் சொல்கின்றார். “ யார் யார் இந்த சாளக்ராம மஹிமைகளைப் பற்றி சிரத்தையுடன் கேட்கவோ, படிக்கவோ செய்கின்றார்களோ அவர்களது பாபங்கள் அனைத்தும் ஆதவனைக் கண்ட பனித்துளி போல் நீங்கும். இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் அவர்கள் பேறு பெற்றவர்கள்” என்கின்றார்.

இவ்வரிய தொடரினை இதுகாறும் படித்தும், என்னை ஊக்கப்படுத்தியும் வந்த உங்களையும் சேர்த்துதான் அவர் அப்போதே சொல்லி வைத்துள்ளார்...! இப்போதைக்கு அப்போதே சொல்லி வைத்தார்.!

வாழ்க வைணவம்..! வளர்க அடியார்கள்....!

என் மனம் நிறைந்த நிறைவோடும், நேசத்தோடும், அரங்கனின் அடியரர்களாகிய உங்கள் பாதம் பணிந்து விடைபெறுகின்றேன்...! விரைவில் “நவவித பக்தி“ மூலமாக நம் கருத்துக்களை பரிமாறிக்கொள்வோம்..!

நமஸ்காரம்-------- **முரளீ பட்டர்-**

====================================================================